கோத்தகிரியில் பாலிடெக்னிக் பள்ளி

*37 **வினா.—திரு. ஜெ. பெள்ளி கௌடர்** : மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா :

(அ) நீலகிரி மாவட்டம், கோத்தகிரியில் பாலிடெக்னிக் பள்ளி ஆரம்பிக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

State Transport Buses

* 38 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Public Works be pleased to state the cost of body building for one bus in the State Transport Department?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி :

பேருந்தின் வகை	'பாடி' கட்டுவதற்குச் சராசரிச் செலவு
	ரூ.
1. சென்னை மாநகர வகைப் பேருந்து	12,870
2. வெளியூர் வகைப் பேருந்து	13,838
3. சீர்வசதி வண்டி (விரைவுப் பேருந்து)	26,270

திரு. ஏ. எம். ராஜா: இந்த பஸ் பாடிகள் எத்தனை ஆண்டு களுக்கு உழைக்கின்றன என்பதை அரசு தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இவைகளை பாடிகளைப் பொறுத்து மாத்திரம் வைத்துக்கொள்ளுவதில்லை. அதோடு சேர்ந்திருக்கிற 'சாஸி'யைப் பொறுத்தும், வண்டிகளினுடைய வயது கணக்கிடப்படுகிறது. இதற்கு முன்பு நான்கு ஆண்டுகள் என்று இருந்ததை ஐந்தாண்டுகள் அளவுக்கு அதிகமாக உழைப் பதற்கு அவைகளினுடைய ஆயுளைக் கூட்டவேண்டும் என்று தீர்மானம் செய்திருக்கிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நாகர்கோயிலில் இராணித் தோட்டத்தில் அமைந்திருக்கிற அந்த ஓர்க்ஷாப்பில் ஒரு பஸ் பாடி கட்டுவதற்கு ஆகும் செலவினத்தைப்பற்றி தயவு செய்து அமைச்சர் அவர்கள் விவரம் இருந்தால் கூற முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நாகர்கோயிலுக்கென்று தனியாக விவரம் இல்லை. நாகர்கோவியிலில் மாதமொன்றுக்குப் பத்து வண்டிகள் கட்டப்படுகின்றன. சென்னைக்கும் நாகர் கோயிலுக்கும் சிறிதுதான் வித்தியாசம். தனித்தனியாக விவரம்—சென்னையைப் பொறுத்துச் சொன்னால்--நாகர்கோயிலைப் பொறுத்து, சற்றுதான் வித்தியாசம் இருக்கும்.